# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

மனு எண்: 1451/2017/ ஊராட்சி

ஆணை எண்: 249 /2017

நாள்: 31/10/2017

A. முகமது பிச்சை,
4/15, செட்டி தெரு, விளாக்கோரி
மதுரை – 6. - மனுதாரர்

செயலாளர்,
விளாச்சேரி ஊராட்சி,
மதுரை மாவட்டம். - எதிர் மனுதாரர்

## ஆணை

திரு. ஏ. முகமது பிச்சை, விளாச்சேரி ஊராட்சி, மதுரை மாவட்டம், அவரது 12.10.2017 நாளிட்ட கடிதத்தில் விளாச்சேரி ஊராட்சியில் சீரான கண்காணிப்பில்லாத குடிநீர் விநியோகிக்காததால் 40 சதவிகித மக்களுக்கு சரியாக தண்ணீர் கிடைப்பதில்லையென்றும், அரசியல்வாதிகள் மற்றும் செல்வாக்கானவர்கள் நேரடியாக குழாயிலிருந்து மோட்டார் வைத்து தண்ணீர் எடுத்துக்கொள்கிறார்கள் என்றும், ஆனால் தண்ணீர் வரி சுமார் 83 நபர்கள் மட்டுமே கட்டுவதாகவும், மற்றவர்கள் வரி கட்டுவதில்லையென்றும் தெரிவித்து, இது குறித்து போர்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, தண்ணீர் வரி வசூலிக்கவும், தண்ணீர் வரி கட்டாதவர்களுக்கு குடிநீர் இணைப்பை துண்டிக்கவும் வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)–ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே மனுதாரர் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. இம்மனு விளாச்சேரி ஊராட்சியை சார்ந்தது ஆகும். எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர்,

மதுரை மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரர் திரு. ஏ. முகமது பிச்சை அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

சென்னை-600 032

பெறுநர்
A. முகமது பிச்சை,
4/15, செட்டி தெரு, விளாச்சேரி,
மதுரை – 6.

நகல்

1. மாவட்ட ஆட்சித்தலைவர்,
   மதுரை மாவட்டம்.
   மதுரை (இணைப்புகளுடன்)
2. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
3. பேரூராட்சி பிரிவு
4. உதிரி–1